

விருதுநகர் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆய்வு கூட்டம் மற்றும் அரசு மருத்துவக்கல்லூரி கலையரங்கத்தில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் மற்றும் சாத்தூர் – ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி கழக நிர்வாகிகளுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சி விருதுநகர் தெற்கு மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், விருதுநகர் வடக்கு மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு வருகை தந்த கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு விருதுநகர் தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பட்டு அணி அமைப்பாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர்.ரமேஷ் மற்றும் துணை அமைப்பாளர்கள் சார்பில் நினைவு பரிசு வழங்கபட்டது.



விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி தொகுதியில் கானை ஒன்றியம் மேல்காரணை மற்றும் கஞ்சனூர் அரசு பள்ளியில் பயிலும் மாணவ–மாணவிகள் பத்தாம் வகுப்பில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த ஏழு மாணவ – மாணவிகளுக்கு தலா ரூபாய்.10,000/– வீதம் மொத்தம் 70,000 ரூபாய் தனது சொந்த பணத்தை மாணவர்களின் மேல்நிலை பயில்வதற்கு உதவியாக இருப்பதற்கு விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா வழங்கினார்.உடன் பள்ளி கல்விதுறை முதன்மை கல்வி அலுவலர் அறிவழகன் அலுவலர்கள், ஒன்றிய செயலாளர் R.P முருகன், பள்ளி தலைமை ஆசிரியர்கள், மற்றும் மாணவ – மாணவிகளின் பெற்றோர்கள் உடனிருந்தனர்.

### மண்டல பொறுப்பாளர்–அமைச்சர் தங்கம் தென்னரசு - தொகுதி மேற்பார்வையாளர் திருச்சி சிவா எம்,பி, பங்கேற்பு!

# மேலூர் சட்டமன்றத் தொகுதி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்–அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!

மதுரை, செப்.26-

வருகிற 27ஆம் தேதி மேலூரில் மேலூர் சட்டமன்ற தொகுதிக்கான திமுக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைபெறுவதாகவும் இதில் மண்டல பொறுப்பாளர், அமைச்சர் தங்கம் தென்னரசு, மேலூர் தொகுதி மேற்பார்வையாளர் திருச்சி என்.சிவா எம்.பி., உள்ளிட்டோர் பங்கேற்று ஆலோசனைகள் வழங்க உள்ளதாக வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவு துறை அமைச்சர் பி.மூர்த்தி தனது அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளார் அதன் விபரம்



எல்லோர்க்கும் எல்லாம் என்ற திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகிற 2026 சட்டமன்ற தேர்தலில் 200 தொகுதிகளுக்கு மேல் தி.மு.க. கூட்டணி வெற்றி பெற வேண்டும் என்ற நோக்குடன் பல்வேறு வியூகங்களை வகுத்து தேர்தல் பணிகளை முடுக்கி விட்டுள்ளார். அதன் ஒரு பகுதியாக ஏற்கனவே மாவட்டம் தோறும் மண்டல பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களை தொகுதி மேற்பார்வையாளரக நியமித்துள்ளார்

அதன்படி மேலூர் சட்டமன்ற தொகுதிக்கு திருச்சி என்.சிவா எம் பி நியமிக்கப்பட்டுள்ளார்

அதனை முன்னிட்டு நாளை (27.09.2025-சனிக்கிழமை)காலை 10 மணிக்கு மேலூரில் அழகர்கோவில் சாலையில் அமைந்துள்ள லதா திருமண மண்டபத்தில் மேலூர் சட்டமன்ற தொகுதிக்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது

இக்கூட்டத்தில் மண்டல பொறுப்பாளர் நிதி மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, கழக கொள்கை பரப்புச் செயலாளர் திருச்சி சிவா எம் பி, தொகுதி பொறுப்பாளர் வ.து.ந. ஆனந்த் உள்ளிட்டோர் பங்கேற்று தேர்தல் நடவடிக்கை தொடர்பாக ஆய்வு நடத்தி பல்வேறு ஆலோசனைகள் வழங்க உள்ளனர்

இக்கூட்டத்தில் மேலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பிஎல் ஏ டு, பி எல் சி உள்ளிட்ட வாக்குச்சாவடி பாகமுகவர்கள், கழக முன்னோடிகள், கழகத்தினர் என அனைவரும் தவறாது பங்கேற்று சிறப்பிக்க வேண்டுமென வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### தென்காசியில் மாநில அளவிலான அடைவுத் தேர்வு!

# பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கான ஆய்வுக் கூட்டம்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில் நடைபெற்றது!

தென்காசி.செப்.26.

தென்காசி மாவட்டம் ஆய்க்குடி ஜே.பி.பொறியியல் கல்லூரியில் 24.09.2025 அன்று மாநில அளவிலான அடைவுத்தேர்வு 2025 (SLAS) பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கான ஆய்வுக் கூட்டம் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர் முன்னிலை யில் நடைபெற்றது.

பின்னர் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்ததாவது.

தென்காசி மாவட்டத்தில் கற்றல் அடைவு மிகச்சிறப்பாக உள்ளது.தமிழ் நாட்டில் உள்ள 38 மாவட்டங்களில் தென்காசி மாவட்டத்தில் கற்றல் அடைவு 4 வது இடத்தில் உள்ளது.12 ஆம் வகுப்பை பொறுத்தவரைக்கும் 94 சதவீதம் தேர்ச்சி அடைந்துள்ளனர். ஆசிரியர்கள் அனைவரும் ஆசிரியர் தேர்வு வாரியம் பற்றிய எதிர்மறை எண்ணம் இல்லாமல் நேர்மறை எண்ணத்துடன் பள்ளித் தேர்வில் மட்டுமல்லாமல் பொதுத்தேர்விலும் அதிக கவனம் செலுத்த வேண்டும். தென்காசி மாவட்டத்தில் உள்ள பள்ளிக் குழந்தைகள் கற்றல் அடைவில் முன்னேறி வருவது மிகப்பெரிய உற்சாகத்தை கொடுத்துள்ளது. கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்னும் கல்வி எழுச்சி விழாவினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைக்க உள்ளார்கள்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யா மொழி தெரிவித்தார்.

கூட்டத்தில் தொடக்கக் கல்வி இயக்குநர் (சென்னை) முனைவர் பூ.ரமேஷ், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (சென்னை) முனைவர் வை. குமார், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் முனைவர்.பி.கோல்டா கிரேனா ராஜாத்தி, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ரெஜினி,மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை) கண்ணன், மற்றும் தென்காசி மாவட்ட பள்ளிக் கல்வித்துறை தலைமையாசிரியர்கள், அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### அன்னியூர் தொகுதியில் பத்தாம் வகுப்புத் தேர்வில் முதலிடம் பெற்ற

# 7 மாணவர்களுக்கு தலா ரூ.10 ஆயிரம் வீதம் ரூ.70 ஆயிரம் நிதி உதவி!

## அன்னியூர் சிவா எம்.எல்.ஏ. தமது சொந்த நிதியிலிருந்து வழங்கினார்!

விழுப்புரம், செப். 26–

விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதிக்குட்பட்ட இரு அரசு மேல்நிலைப்பள்ளிகளில் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு தலா ரூ.10 ஆயிரம் நிதியுதவியை அன்னியூர் அ.சிவா எம்.எல்.ஏ. வழங்கினார்.

காணை ஒன்றியத்திலுள்ள காரணைபெரிச்சானூர், கஞ்சனூர் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கடந்த கல்வியாண்டில் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் கிராமப்புறப் பகுதிகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் 7 பேர் முதல் மூன்று இடங்களைப் பிடித்தனர்.

இதைத் தொடர்ந்து இந்த மாணவ, மாணவிகள் பேரையும் கடந்த செவ்வாய்க்கிழமை தனது அலுவலகத்துக்கு வரவழைத்த விக்கிர வாண்டி எம்.எல்.ஏ. அன்னி யூர் அ.சிவா, தனது சொந்த நிதியிலிருந்து தலா ரூ.10 ஆயிரம் நிதியுதவி வழங்கி வாழ்த்தினார்.

நிகழ்வில் விழுப்புரம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ரெ. அறிவழகன், பள்ளித் தலைமையாசிரியர்கள் எட்வின் ஜோசப், முருகன், கல்வி மேலாண்மைக் குழுவைச் சேர்ந்த முருகன் மற்றும் மாணவ, மாணவிகளின் பெற்றோர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.


